<u>செய்தி வெளியீடு எண்.822</u> <u>நாள்.30.9.2008</u>

**பத்திரிக்கை செய்தி**

உலகில் 55 இலட்சம் மக்கள் புகையிலை பழக்கத்தால் ஆண்டுதோறும் உயிர் இழக்கிறார்கள். உலகத்திலுள்ள குழந்தைகளில் பாதிக்கு மேல் புகை பிடிப்பவர்கள் விடும் புகையை சுவாசிப்பதால் பாதிக்கப்படுகிறார்கள்.

ஆண்களில் 57 விழுக்காடும், பெண்களில் 10.8 விழுக்காடும் புகையிலையை பயன்படுத்துகிறார்கள். நாள் ஒன்றிற்கு 2500 நபர்கள் எனஆண்டுதோறும் சுமார் 9 இலட்சம் மக்கள் புகையிலைப் பழக்கத்தினால் உயிர் இழக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் 13 வயது முதல் 15 வயது வரையுள்ள பள்ளி செல்லும் குழந்தைகளில் 7 சதவீதத்திற்கு மேல் புகையிலை பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளனர்.

நாள்தோறும் 5500 இளைஞர்கள் புதிதாக புகையிலை பொருட்களை பயன்படுத்த தொடங்குகிறார்கள்.

புகையிலையை பயன்படுத்துவதாலும், புகை பிடிப்பவர்களால் விடப்படும் புகையை சுவாசிக்க நேருவதாலும் அவர்களுக்கு அருகிலுள்ளவர்களுக்கு

- நுரையீரல் புற்றுநோய்,
- ஆஸ்த்துமா,
- பக்க வாதம் மற்றும்
- இருதய நோய்கள் ஏற்படுகின்றன.

புகையிலை மற்றும் புகையிலை பொருட்களை பயன்படுத்துவதை முற்றிலுமாக தடுப்பதன் மூலமே மேற்குறிப்பிட்ட நோய்களையும், இறப்புகளையும் தடுத்திட முடியும்.

இந்திய அரசு, பொது இடங்களில் புகை பிடிக்க தடை விதிக்கும் சட்டத்தை கொண்டு வந்துள்ளது. இச்சட்டத்தை சிகரெட் மற்றும் புகையிலைப் பொருட்கள் (விளம்பரத்தை தடை செய்தல், விற்பனை செய்தல், உற்பத்தி செய்தல், வினியோகம் செய்தல்) தடை சட்டம்–2003–த்தின் கீழ் வெளியிட்டுள்ளது. இச்சட்டத்தின் சிறப்பம்சங்கள்:–

1. பொது இடங்களில் புகை பிடிப்பதை தடை செய்தல் (பிரிவு – 4).

2. நேரிடையாகவோ, மறைமுகமாகவோ விளம்பரம் செய்தல், ஊக்கப்படுத்துதல் ஆகியவற்றை தடைசெய்தல் (பிரிவு –5).
3. புகையிலைப் பொருட்களை கல்வி நிலையங்களுக்கு அருகில் அதாவது 100 மீட்டர் தூரத்திற்குள் விற்பனை செய்வது மற்றும் 18 வயது உட்பட்டவர்களுக்கு புகையிலைப் பொருட்களை விற்பது ஆகியனவற்றை தடை செய்தல் (பிரிவு – 6 ).

4. புகையிலைப் பொருட்களின் உறைகளின் மேல், படத்துடன் கூடிய எச்சரிக்கை விளம்பரம் செய்தல். (பிரிவு–7,8,9,10).

இச்சட்டம் இந்தியா முழுவதும் வருகிற அக்டோபர் 2–ந் தேதி முதல் அமுலாக்கப்படுகிறது. இதன் மூலம் பொது இடங்களில் புகை பிடிப்பது முற்றிலும் தடை செய்யப்படுகிறது.

பொது இடங்கள் என்பது பொது மக்கள் கூடுகின்ற இடங்கள் என அறிவிக்கப்பட்டுள்ள அரங்கங்கள், திறந்த வெளி அரங்கங்கள், மருத்துவமனைகள், புகை வண்டி நிலையங்கள், புகை வண்டிக்காக காத்திருக்கும் அகைக, வணிக வளாகங்கள், அலுவலக வளாகங்கள், திரையரங்குகள், நீதி மன்ற கட்டிடங்கள், பொது மக்கள் புழங்கும் பகுதிகளான உணவு விடுதிகள், தங்குமிடங்கள், சிற்றுண்டி விடுதிகள், பேருந்து நிலையங்கள், கேளிக்கை விடுதிகள், ஆகியன உள்ளடங்கும்.

இச்சட்டத்தின் முக்கியம்சங்கள்.

(1) பொது இடத்தின் உரிமையாளர், பொறுப்பாளர், மேலாளர், கண்காணிப்பாளர், அல்லது தொடர்புடையோர் கீழ்கண்டவாறு இச்சட்டத்தை கடை பிடிக்க வேண்டும்.

(அ). சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள பொது இடங்களில் எவரையும் புகை பிடிக்க அனுமதிக்க கூடாது.

(ஆ). ‘‘இது புகை பிடிக்க தடை செய்யப்பட்ட பகுதி’’ மற்றும் “இங்கு புகை பிடிப்பது குற்றமாகும்’’ என்ற எச்சரிக்கை அறிவிப்பை பொது இடத்தின் நுழைவாயிலில் வைத்திருக்க வேண்டும்.

(இ). பொது இடத்தில் சிகெரெட், பீடி போன்றவற்றின் சாம்பலை சேகரிக்கும் கிண்ணங்கள், தீப்பெட்டிகள், பேட்டரியில் இயங்கும் தீப்பெட்டிகள் அல்லது புகை பிடிப்பதற்கு உதவக்கூடிய எந்தவிதமான பொருட்களையும் வைத்திருக்க கூடாது.

**(2)** இச்சட்டத்தை மீறி, பொது இடங்களில் புகை பிடிப்பவர்களுக்கு ரூ.200 வரை அபராதம் விதிக்கப்படும்.

**(3)** இச்சட்டத்தை மீறுபவர்கள் பற்றி புகார் தெரிவிக்க ஏதுவாக புகார் தெரிவிக்கப்பட வேண்டியவர்கள் முகவரி, தொலைபேசி எண் போன்ற விவரங்கள் அறிவிப்பு பலகையில் தெரிவிக்கப்பட வேண்டும்.

**(4)** புகார் தெரிவித்த பின்பு சம்மந்தப்பட்டவர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சம்மந்தப்பட்டவர் அதற்குண்டான மொத்த அபராதத் தொகையையும் கட்ட வேண்டும்.

## இந்த சட்டத்தை அமுலாக்கும் அலுவலர்கள்

தமிழ்நாட்டில்

- காவல் துறை அதிகாரிகள்
- சுகாதாரத் துறை அதிகாரிகள் மற்றும்
- மருந்துக் கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள்

ஆகியோர் இச்சட்டத்தை அமுல்படுத்தும் அலுவலர்கள் ஆவார்கள். மேலும் கீழே குறிப்பிட்டுள்ள அலுவலர்களும் இச்சட்டத்தை அவரவர் நிர்வாக வரம்பிற்குள் செயல்படுத்தும் அலுவலர்கள் ஆவார்கள்.

| **வ. எண்** | **நடவடிக்கை எடுக்க அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள்** | **பொது இடங்கள் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகள்** |
|---|---|---|
| 1 | மத்திய கலால் ஆய்வாளர் வருமான வரித்துறை ஆய்வாளர்கள் விற்பனை வரி ஆய்வாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள், போக்குவரத்து ஆய்வாளர்கள் | அவர்தம் அதிகாரவரம்பிற்கு உட்பட்ட அனைத்து பொது இடங்களிலும். |
| 2 | இரயில் நிலைய அதிகாரிகள், துணை நிலைய அதிகாரிகள்,தலைமை நிலைய அதிகாரிகள், நிலைய பொறுப்பாளர்கள். | ரெயில் நிலையம் மற்றும் அதற்குட்பட்ட பகுதிகள். |
| 3 | அனைத்து அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் அதற்கு இணையான அதிகாரிகள் தன்னார்வ நிலையங்கள் மற்றும் மாநகராட்சிகள் | அரசு அலுவலகங்களில் அவரவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகள். |
| 4 | இயக்குநர்/ மருத்துவ கண்காணிப்பாளர்/ மருத்துவமனை நிர்வாகி | அரசு மற்றும் தனியார் மருத்துவமனை |
| 5 | தபால் நிலைய அதிகாரி | அவரவர் அதிகாரத்திற்கு உட்பட்ட தபால் நிலையங்கள் |
| 6 | தலைமை நிலைய அதிகாரி/ மனிதவள மேம்பாட்டு மேலாளர்/தலைமை நிர்வாகி | தனியார் அலுவலகம்/பணி நிலையம். |
| 7 | கல்லூரி / பள்ளி / தலைமை ஆசிரியர் / முதல்வர் | அவரவர்களுக்கு உட்பட்ட கல்வி நிலையங்கள் |

| | | |
|---|---|---|
| 8 | நூலகர் / துணை நூலகர்/ நூலக பொறுப்பாளர் மற்றும் மற்ற நூலக அலுவலர் | நூலகம் / வாசகர் அறை |
| 9 | விமான நிலைய மேலாளர்/ விமான நிலைய அதிகாரிகள் மற்றும் அதிகாரிகள் | விமான நிலையங்கள் |
| 10 | இயக்குநர் பொது சுகாதாரம் / இயக்குநர் சுகாதாரப் பணிகள் | அனைத்து பொது இடங்கள் |
| 11 | மத்திய மற்றும் மாநில பொறுப்பு அதிகாரிகள் | அனைத்து பொது இடங்கள் |
| 12 | ஒருங்கிணைப்பு அலுவலர் புகையிலைக் கட்டுப்பாடு மாநில மற்றும் மாவட்ட நிலையம் | அனைத்து பொது இடங்கள் |

பொது சுகாதாரத் துறை பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

- அனைத்து அரசு துறை அலுவலர்களின் கூட்டம் 17.09.2008 அன்று சுகாதாரத் துறை செயலர் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இந்த சட்டம் நடைமுறை படுத்துவது குறித்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

- 22.09.2008 அன்று அனைத்து துறையிலும் உள்ள அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் மற்றும் பொது சுகாதாரத் துறை இயக்குநர்களுக்கும் இந்த சட்டம் தொடர்பான நடைமுறை செயலாக்கம் தொடர்பாக அறிவுரைகள் வழங்கபட்டுள்ளது.

- இச்சட்டத்தை செயல்படுத்த மாநில, மாவட்ட, வட்ட மற்றும் கிராம அளவில் பறக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது.

- இச்சட்டத்தை 02.10.2008 முதல் செயல்படுத்தக்கோரி அனைத்து மாநில அரசு துறைச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் அனைவருக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்,
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.